## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக

# கடலோர மாவட்டங்களில் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கம்!

## சுற்றுச் சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல்!

சென்னை, செப். 24-

**‘திராவிட மாடல்’ ஆட்சியில், தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களில் வளர்க்கப்படும் அலையாத்திக் காடுகள் உருவாக்கப்பட்டும், புனரமைக்கப்பட்டும் வருகின்றன. இது சுற்றுச் சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல் எனலாம்.**

இது குறித்து ‘தினகரன்’ நாளிதழில் வெளியான செய்தி வருமாறு:-



தமிழ்நாடு, 1,076 கிலோ மீட்டர் நீளமான தனது அழகிய கடற்கரையால் இயற்கையின் செழிப்பையும் வளத்தையும் பறைசாற்றுகிறது. இந்தக் கடற்கரையோரப் பகுதிகளில், பல்லுயிர் பெருக்கத்திற்கும், இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாப்பிற்கும் முக்கியப் பங்கு வகிப்பவை அலையாத்தி காடுகள். இவை, பூமியின் நுரையீரல்கள் என்று அழைக்கப்படும் காடுகளின் ஒரு தனித்துவமான வகையாக, கடல் மற்றும் நிலத்தின் இணைப்புப் பகுதியில் உயிர்ப்புடன் செழித்து வளர்கின்றன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, 2021ம் ஆண்டு பொறுப்பேற்றவுடன், “பசுமை தமிழகம், செழிப்பான எதிர்காலம்” என்ற தொலை நோக்குத் திட்டத்தை அறிவித்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மை நோக்கமாகக் கொண்டது. இதன் விளைவாக, மாநிலத்தின் கடலோர மாவட்டங்களில் 2,403 ஹெக்டேர் (சுமார் 5,935.813 ஏக்கர்) புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும், 1,207 ஹெக்டேர் பழைய, சிதைந்த காடுகள் புனரமைக்கப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளன. இந்த மாபெரும் சாதனை, இந்தியாவின் சுற்றுச்சூழல் வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

### முக்கியத்துவம்

அலையாத்தி காடுகள், கடல் மற்றும் ஆறு நீர் கலக்கும் சதுப்புநிலப் பகுதிகளில் வளரும் தனித்துவமான தாவர சமூகங்கள். இவை பல வகைகளில் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் பயனளிக்கின்றன. புயல் மற்றும் ஆழிப்பேரலை போன்ற இயற்கை சீற்றங்களில் கடல் அலைகளின் வேகத்தை 70% வரை குறைக்கின்றன. 2004 சுனாமியின் போது, பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றியது இதற்கு ஒரு உதாரணம். இவை மீன்கள், இறால்கள், நண்டுகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட பறவை இனங்களுக்கு வாழ்விடமாகவும், இனப்பெருக்க மையமாகவும் உள்ளன. மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாகவும், சுற்றுலாவிற்கு அழகிய இடங்களாகவும் அமைகின்றன. கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி, காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்கின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் 2,511 ஹெக்டேர் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருவாரூர் (1,350 ஹெக்டேர்): முத்துப்பேட்டை சதுப்புநிலப் பகுதியில் மாநிலத்தின் மிகப்பெரிய திட்டம். கோடியக்கரை மற்றும் மன்னார்கோயில் பகுதிகளில் மீனவர் சமூகத்தின் பங்களிப்புடன் இயற்கை விவசாயத்துடன் ஒருங்கிணைந்து நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நாகப்பட்டினம் (250 ஹெக்டேர்): வேதாரண்யம் மற்றும் பாயிண்ட் காலிமியர் பறவைகள் சரணாலயத்தில் உவர் நீர் மீன் வளர்ப்புடன் இணைந்த காடுகள் உருவாக்கப்பட்டன. தூத்துக்குடி (211 ஹெக்டேர்): முத்துக் குளித்தல் மையங்கள் மற்றும் கோரல் பாறைகளைப் பாதுகாக்கும் வகையில் அப்பன் கிராமம் மற்றும் விலாத்திகுளம் பகுதிகளில் நடவு.

மயிலாடுதுறை (190 ஹெக்டேர்): சீர்காழி அருகே நீர்ப்பறவைகள் சரணாலயத்தை விரிவாக்கி, ஈரநிலங்களுடன் இணைந்த காடுஉருவாக்கம்.

தஞ்சாவூர் (120 ஹெக்டேர்): மன்னார் கோயில் பகுதியில் அங்கக விவசாயத்துடன் இணைந்த கடலோர வளர்ச்சி.

செங்கல்பட்டு (108 ஹெக்டேர்): கடலோரப் பகுதிகளில், குறிப்பாக கோவளம் மற்றும் முட்டுக்காடு அருகே, இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்காக அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டன.

கடலூர் (95 ஹெக்டேர்): பிச்சாவரம் காடுகளின் விரிவாக்கம் மற்றும் தொடர்ச்சி பாதை உருவாக்கம்.

புதுக்கோட்டை (90 ஹெக்டேர்): பவளப் பாறைகளைப் பாதுகாக்க அவணிகுலம் மற்றும் வேலூர் பகுதிகளில் நடவு. ராமநாதபுரம் (75 ஹெக்டேர்): மண்டபம் மற்றும் வாலிநோக்கம் பகுதிகளில் மீன் வளர்ச்சி மையங்களின் பாதுகாப்பு.

சென்னை (12 ஹெக்டேர்): பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அடையாறு கழிமுகத்தில் நகர்ப்புற சுற்றுச்சூழல் மேம்பாடு.

சென்னை: மாநகர பசுமை முன்னெடுப்பு பெருநகரமான சென்னையில் அலையாத்தி காடுகள் உருவாக்குவது ஒரு தனித்துவமான சவாலாக இருந்தாலும், தி.மு.க. அரசு இதை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது:

**பக்கிங்ஹாம் கால்வாய் பசுமைத் திட்டம்:** கழிப்பட்டூர் ஓ.எம்.ஆர் சந்திப்பு பகுதியில் 12 ஹெக்டேர் பரப்பளவில் 12,500க்கும் மேற்பட்ட அலையாத்தி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இது நகர வெள்ள நிர்வாகத்திற்கும், மழைநீர் சேகரிப்பிற்கும் உதவுகிறது. அடையாறு கழிமுக மீட்டெடுப்பு: அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தில் 5 ஹெக்டேர் பரப்பளவில் 5,000 செடிகள் நடப்பட்டு, நீர் மாசுபாடு குறைப்பு மற்றும் பறவைகள் வருகையை அதிகரிக்க உதவியுள்ளன. எதிர்காலத் திட்டம்: 2024-25ல் கூவம், அடையாறு, மற்றும் கொசஸ்தலையார் ஆறுகளின் கழிமுகங்களில் 1,00,000 புதிய மரக்கன்றுகள் நடவு செய்ய 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில், குறிப்பாக கோவளம் மற்றும் முட்டுக்காடு போன்ற கடலோரப் பகுதிகளில், 10 ஹெக்டேர் பரப்பளவில் புதிய அலையாத்தி காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி, கடல் அரிப்பைத் தடுப்பதோடு, உள்ளூர் மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும் வழிவகுத்துள்ளது. இத்திட்டம், சென்னையை அடுத்த பெருநகரப் பகுதியில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்யும் ஒரு முக்கிய முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

### புனரமைப்பு: புத்துயிர்

புதிய நடவு மட்டுமல்லாமல், 1,207 ஹெக்டேர் சிதைந்த அலையாத்தி காடுகள் அறிவியல் அடிப்படையில் புனரமைக்கப்பட்டுள்ளன மண்ணின் உப்புத்தன்மை, pH மட்டம், மற்றும் ஊட்டச்சத்து பகுப்பாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டது. இயற்கை நீர் ஓட்டம் மீட்டெடுக்கப்பட்டு, உப்பு மற்றும் இனிப்பு நீரின் கலப்பு சமநிலைப்படுத்தப்பட்டது. மீன், இறால், நண்டு இனங்கள் மீளவும், உயிரியல் சங்கிலி வலுப்படுத்தப்பட்டது.

### ஒரு முன்னுதாரணம்

தமிழ்நாடு அரசின் இந்த மாபெரும் முயற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர் பெருக்கம், மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. செங்கல்பட்டு உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் புதிய அலையாத்தி காடுகளின் உருவாக்கம், மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக, தமிழ்நாடு தனது இயற்கை வளங்களை மீட்டெடுத்து, வருங்கால சந்ததியினருக்கு ஒரு பசுமையான, பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்கிறது. “பசுமை தமிழகம்” என்ற கனவு, அலையாத்தி காடுகளின் மறுமலர்ச்சியுடன் நனவாகி வருகிறது.


# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழா!

## ‘தினகரன்’ நாளேடு பாராட்டு!

சென்னை, செப், 24-

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்று ‘தினகரன்’ நாளேடு நேற்றைய தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து தினகரன் நாளேட்டின் நேற்றைய தலையங்கம் வருமாறு:-



தினகரன்

செப்டம்பர் 23, 2025 செவ்வாய்க்கிழமை

கல்வித்துறைக்கு மகுடம்

தமிழ்நாடு எப்போதும் கல்வியில் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக, உயர்கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில் மற்ற முதல்வர்களை காட்டிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், “கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருடமுடியாத சொத்து” என்று அடிக்கடி சொல்லி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அதற்கேற்றாற்போல் பள்ளி கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார். அதிலும் உயர்கல்வியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி காலம், பொற்காலம் என்று சொல்லலாம்.

ஏனெனில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டத்தை முதல்வர் அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் மூலம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க வழிவகை செய்கிறது. இதனை

தமிழ்நாடு எப்போதும் கல்வியில் சிறந்துவிளங்கி வருகிறது. குறிப்பாக, உயர்கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில் மற்ற முதல்வர்களை காட்டிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், “கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருட முடியாத சொத்து” என்று அடிக்கடி சொல்லி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அதற்கேற்றாற்போஸ் பள்ளி கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களை யும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார். அதிலும் உயர்கல்வியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி காலம், பொற்காலம் என்று சொல்லலாம்.

ஏனெனில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டத்தை முதல்வர் அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் மூலம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க வழிவகை செய்கிறது. இதனை தொடர்ந்து மாணவர்களுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ திட்டமும் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.

பள்ளி படிப்பை முடித்து மாணவர்கள் இடை நிற்றல் இல்லாமல் உயர்கல்வியில் சேர வேண்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கில் கொண்டு வந்து உயர்கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வந்துள்ளார். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சீரிய திட்டமாக பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. அகில இந்திய உயர்கல்வி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி, உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவீதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. இது அகில இந்திய சராசரியைவிட 2 மடங்கு அதிகமாகும்.

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும் என்ற அவ்வையார் பாடலுக்கு ஏற்ப, ஒரு குடும்பத்தில் ஒருவர் கல்வி பயின்று வேலையில் சேர்ந்தால் அந்த குடும்பமே உயர்ந்து விடும்.

இந்நிலையில் சென்னையில் வரும் 25ம் தேதி “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” விழா நடக்க உள்ளது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியும் கலந்து கொள்கிறார்கள் என அமுதா ஐ.ஏ.எஸ். நேற்று கூறியுள்ளார். மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் “நான் முதல்வன்” திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், இதில் தொழில் முறை வழிகாட்டுதல், வேலை வாய்ப்பு பயிற்சி, திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இடம் பெறுகின்றன. பள்ளி மாணவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவு வழங்கும் திட்டம், அரசு பள்ளிகளில் இலவச கையடக்க கணினி, சைக்கிள், புத்தகங்கள், காலணிகள் மற்றும் மாணவர்களின் உயர்கல்வி உதவித்திட்டங்களை பட்டியலிட்டார். தமிழக அரசின் கல்வி திட்டங்கள் நகர்ப்புற மாணவர்களுக்கே அல்லாமல் கிராமப்புற மாணவர்களுக்கும் சமமாக சென்றடைய வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற் கொள்ளப்படுகிறது.

மாணவர் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்து வருவதால், கல்வியில் முன்னேற்றம் அடைந்த மாநிலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகவும், கல்வித்துறைக்கு மணிமகுடமாகவும் அமையும் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மேல் அருங்குணம் ஊராட்சி தே.மு.தி.க. நிர்வாகிகள் அக்கட்சியிலிருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் மேல்மலையனூர் ஒன்றியச்செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்ரமணியன் உள்ளனர்.

# திருவாரூர் மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டம்!

திருவாரூர், செப். 24 –

திருவாரூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி புதிய நிர்வாகிகள் அறிமுக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் மாணவர் மன்ற அமைப்புக்களை அமைத்து மாணவர் அணியை மேலும் பலப்படுத்துங்கள் என மாணவரணி புதிய நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமிக்கப்பட்டிருக் கும் மாணவரணி புதிய அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் மதி.நெல்சன் மண்டேலா வரவேற்புரை வாசித்து நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார். நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் சா.பகலவன், துணை அமைப்பாளர்கள் மதி.முத்துக்குமார், ஜே. நூருல் அமீன், வை.யோகபாலன், சகுந்தலா தேவி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

நிகழ்வில் தலைமை ஏற்ற மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் மாணவரணி அமைப்பாளர்களாக பொறுப்பேற்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களைகூறினார்.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14 வயதில் மாணவ நேசன் என்கிற பத்திரிக்கை மூலம் வலுவான மாணவ மன்றத்தை உருவாக்கித்தான் புகழின் உச்சிக்கு சென்றார். அதேபோல மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு ஊரிலும் மாணவர் மன்றங்களை அமைக்க வேண்டும். அப்படி அமைத்து மாணவரணியை மேலும் மேம்படுத்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கவேண்டும் என்று கூறினார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்டம் - திருப்பூர் வடக்கு மாநகரம், திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

## திருப்பூர் வடக்கு மாவட்டம்

### திருப்பூர் வடக்கு மாநகரம்

அமைப்பாளர் - க. கிரித்தின் கவியரசு எஸ்.என்.வி.எஸ். 1வது கொங்கு நகர், மெயின் ரோடு, திருப்பூர் - 641607.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சந்துரு 8/258, காமராஜர் வீதி, அங்கேரிபாளையம், திருப்பூர். 2) வீ. கௌதம் சிவகுமார் எஸ்1, சி-பிளாக், சமுக்த்தா அப்பார்ட்மெண்ட், மும்மூர்த்தி நகர், பி.என். ரோடு, திருப்பூர் - 641602. 3) எல். நிசாருதீன் 29/3, 19/3, திருநீலகண்டபுரம் வடக்கு 3வது வீதி, திருப்பூர் - 641602. 4) எ. சூரியபிரகாஷ் 2/5ஏ, ஜீவா வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர். 5) ஆர். சுல்பிகர் அலி 2, பட்டாளம்மன் கோவில் வீதி, பள்ளக்காட்டுத் தோட்டம், வேலம்பாளையம், திருப்பூர். 6) ரா. கிளாடிஸ் அலெக்ஸ் 12/31, டீச்சர்ஸ் குடியிருப்பு, பிஸப் ஸ்கூல் பின்புறம், 4வது வீதி, குமார் நகர், திருப்பூர்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

### திருநெல்வேலி மேற்கு மாநகரம்

அமைப்பாளர் - பி. வினோத்குமார் 1/பி, மாவடி குளத்தாங்கரை, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சரவணன் 18/16, பாலபாக்யா நகர், மதுரை ரோடு, திருநெல்வேலி மாவட்டம். 2) பி. ஜெயகுமார் 6, மேலக்கரை நியூ குடியிருப்பு, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம். 3) முகம்மது ஆஷிக் 87ஏ/1, எம்.ஜி.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். 4) மு. அம்பேத் பிரபாகரன் 13ஏ, கிருஷ்ணபேரி முஸ்லீம் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம். 5) எஸ். சித்ரா 22, எண்ணாயிரம் பிள்ளை கோவில் மேலத் தெரு, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

இரா. ராஜீவ்காந்தி,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

## கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இ.எம்.எஸ். ரபீதின் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ச. ராஜ் திலக்** (5/10, சென்னிவீரம்பாளையம், சிக்கராம்பாளையம், காரமடை, கோவை) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

## தென்காசி வடக்கு மாவட்டம்

தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட டி. தினேஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எஸ். வீமராஜ்** (48ஏ, தெற்கு தெரு, மடத்துப்பட்டி, சங்கரன்கோவில், தென்காசி) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி